பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 08 திங்கட்கிழமை 25.09.2023 கதிர் 318

# சர்வதேச விசாரணை அவசியமன்று பேராயர் மல்க்கம் ரஞ்சித் ‘பல்டி’

## அவரது திடீர் மாற்றத்தால் மக்கள் அதிர்ச்சி

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்குச் செல்ல வேண்டிய தேவை எமக்கில்லை என்று கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். நீதியை நிலைநாட்டுவதற்குசர்வதேசவிசாரணை ஒன்றே வழி என்று வலியுறுத்தி வந்த அவர் திடீரென இப்படி தலைகீழாக மாற்றிப் பேசியுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற சென்-மக்கல் ஆலயத்தின் பொன் விழாவில் பற்கேற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்தஞாயிறுதாக்குதல்தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கு நேர்மையானஅதிகாரிகள்குழாம்ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வேண்டும். குறிப்பாக அரசியல் ☞ 2

# இது ரகசியம் அல்ல!

போர் மற்றும் போருக்குப் பின்னரான காலச் செயற்பாடுகள் காரணமாக இலங்கை நீதித்துறை மீது தமிழ் மக்களுக்கு அதிருப்தி மற்றும் நம்பிக்கையீனம் இருப்பது தெரிந்ததே. பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரக காலத் தடைச் சட்டம் மற்றும் சட்டம் ஒழுங்கு காவலர்களான பொலிஸார் பெரும்பாலும் சிங்களவர்களாகவே இருப்பது, அவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்தால் சூழப்பட்டிருப்பது என்கிற பல்வேறு காரணங்களால் இந்த நிலமை காணப்படுகின்றது.

இருந்தாலும் இலங்கை நீதித்துறை அவ்வப்போது ஆச்சரியப்படுத்தும் விதத்தில் நடந்துகொள்வதும், நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் செயலாற்றுவதும் உண்டு. மைத்திரி - ரணில் நல்லாட்சி என்று ☞ 2

# சீன உதவியில் 1996 வீடுகள்

குறைந்த வருமானம் பெறுபவர்கள் மற்றும் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும் 1996 வீட்டு அலகுகள் குறித்த ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படும் என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

இவ்விடயம் குறித்து அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குறைந்த வருமானம் ☞ 2

# உள்நாட்டில் நீதி கிட்டாவிடின் சர்வதேச விசாரணையே தீர்வு

## ஓமல்பே சோபித்த தேரர் தெரிவிப்பு

உள்நாட்டில் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேசவிசாரணைக்கே செல்லவேண்டிஇருக்கும் என்று பேராசிரியர் ஓமல்பே சோபித்த தேரர் தெரிவித்தார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற சென்-மக்கல்ஆலயத்தின் வருடாந்த விழாவில் பற்கேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்சம்பந்தமாக உண்மைகளைக் கண்டறிதவதற்காக கோடிக்கணக்கான பணத்தினைசெலவழித்து ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அந்த ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகளின்பிரகாரம் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத் ☞ 2

# நிதி குற்றக் வழக்குகளுக்கு தனி நீதிமன்றம் தேவை

## புலனாய்வுப் பிரிவு வலியுறுத்து

நிதிக்குற்ற வழக்கு விசாரணைகளுக்காக விசேட நீதிமன்றம் நிறுவப்பட வேண்டுமென இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதி மோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி குறித்த தேசிய இடர் மதிப்பீட்டுஅறிக்கையின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு முன்வைத்துள்ளகோரிக்கையிலேயே மேற்கண்டவலியுறுத்தலைச் செய்துள்ளது.

அந்த அறிக்கையில், முறைசாரா வகையில் பணம் அனுப்புதல், உண்டியல் முறைமை என்பன நாட்டில் பண மோசடி செய்யும் அபாயகரமான முறையாக மாறியுள்ளது.

அதிக ஆபத் ☞ 2

பிரபல தமிழ் இசையமைப்பாளர்

# சந்தோஷ் நாராயணன் தியாகி திலீபனுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு தனது மனைவியுடன் சென்று அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுவருகைதந்துள்ள இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் மாலை வேளை யாழ்ப்பாணத்தை சேர்ந்த கலைஞர்களை யாழில் உள்ள விருந்தினர் ☞ 2

# 4 அமைச்சுக்களில் மாற்றங்கள் வரும்

நான்கு அமைச்சுப் பொறுப்புக்களில்மாற்றம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்துவரும்வைத்தியர் ரமேஷ் பத்திரனவை சுகாதார அமைச்சின் பொறுப்பை ஏற்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் எனினும்அவர்இதுவரை எவ்விதமான பதில்களையும் ☞ 2

# ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நாடு திரும்பினார்.

ஜி 77 மற்றும் சீன மாநாட்டில் பங்கேற்பதற்காக செப்டெம்பர் 13 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ககியூபாவின் ஹவானாவுக்கு பயணமானார். அங்கிருந்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக செப். 17 ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமெரிக்காவுக்குப் பயனமானார்.

இந்நிலையில் அவர் துபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான இ.கே. 650 விமானம் மூலம் நேற்றுக் காலை 8.30 மணியளவில்நாடு ☞ 2

# நிபா வைரஸிலிருந்து பாதுகாக்க உலக சுகாதார நிறுனத்துடன் பேச்சு

## அமைச்சர் கெஹலிய தகவல்

நிபா வைரஸ் தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உலக சுகாதாரஸ்தாபனத்துடன் கலந்துரையாடி வருவதாகசுகாதாரஅமைச்சர் கெஹலியரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டுகருத்து வெளியிட்டபோதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 8

# பயங்கரவாத மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலங்களை மீளப்பெற வலியுறுத்து

## சட்டத்தரணிகள் சங்கமும் விடுத்தது

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம்என்பவற்றை உடனடியாக மீளப் பெற்றுக்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றிருந்தது. இதன்போது நிறைவேற்றப்பட்ட ☞ 8

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; இடைக்கால இழப்பீடு கிடைத்தது

எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்திற்கான இடைக்கால இழப்பீட்டுத் தொகை நாட்டிற்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சட்டமாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த அறிவிப்பில், எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பல் விபத்திற்கான இடைக்கால இழப்பீட்டுத் தொகையில்878,650.53 அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. எஞ்சிய 16 மில்லியன் ரூபா கொடுப்பனவு திறைசேரியிடம்வழங்கப் பட்டுள்ளது.

குறித்த தொகையானது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் செலவுகளுக்காகக் கிடைக்கப்பெற்றுள்ளது. அத்துடன், கப்பல் நிறுவனத்திற்கான காப்புறுதி நிறுவனத்துடன், அண்மையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய குறித்த இடைக்கால இழப்பீட்டுத் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்காகவும்இழப்பீடு கோரப்பட்டுள்ளது. குறித்த விடயம் தொடர்பில் குறித்த காப்புறுதி ☞ 2

# புளொட்டும் எதிர்ப்பு

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாகநீக்கப்படவேண்டும் என்பதோடு,நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் அடக்குமுறைகளை நோக்கமாகக் கொண்டது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம்சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ளஅவரதுஇல்லத்தில் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1979ஆம் ஆண்டிலிருந்துநடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஆகவேஅதற்குமாற்றாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்வதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மேலும்,நிகழ்நிலைக் காப்புச்சட்டமூலமானது சமூக ஊடகங்கள் முதல் சாதாரண பிரஜைகளின் கருத்து வெளியிடும் சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்துவதாக உள்ளது. ஆகவே, சாதாரண மக்களின் அடிப்படைஉரிமைகளை பாதிக்கின்ற அவ்வாறான ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

சொல்லப்பட்ட காலத்தில், ரணிலைப் பதவி நீக்கி மகிந்த ராஜபக் ஷவைப் பிரதமராக நியமித்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டபோது அவருக்குக் குட்டு வைப்பதைப் போன்று நீதிமன்றம் செயற்பட்டமை அதன் மீதான மதிப்பு மக்கள் மத்தியில் உயர்வதற்குப் பிரதானமான காரணமாக இருந்தது. அதுபோன்றதொரு மற்றொரு வழக்குப் பற்றிய விவரங்களையே இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்ளப் போகின்றேன்.

பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்திய ஒருவருக்கு உயர் நீதிமன்றம் 30 லட்சம் ரூபாய் அபராதம் விதித்ததுத் தீர்ப்பளித்திருக்கிறது. அத்தோடு, முறையான, சரியான ஆதாரங்கள் இல்லாமல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் (சிஐடி) ஒருவரைக் கைது செய்யக்கூடாது என்றும் முக்கியமாக அறிவுறுத்தியிருக்கின்றது.

'குற்றச்சாட்டு நம்பகமானது என்ற தெரிவதற்கு முன்னர் வெறும் முறைப்பாட்டின் பேரில் பொலிஸ் அதிகாரிகள் இயந்திரத்தனமாகக் கைது செய்ய முடியாது' என்று நீதிபதி பி.பி. அலுவிஹாரே தனது தீர்ப்பில் கடிந்துகொண்டிருக்கிறார். 'உண்மைகள் வெளிப்படையாக இல்லாவிட்டால், முறைப்பாடு நம்பகமானதா அல்லது வழங்கப்பட்ட தகவல் நம்பகமானதா என்பதைச் சரிபார்க்க, ஒரு பொலிஸ் அதிகாரி தேவையான விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.' என்றும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

பொதுவான அல்லது தெளிவற்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டால், அரசமைப்பின் மூலம் ஒருவருக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட சுதந்திரங்கள் கணிசமாகக் குறைக்கப்படும் என்று நீதிபதி அலுவிஹாரே கூறினார். ' எனவே, குற்றச்சாட்டைச் சரிபார்ப்பதற்கு, கைது செய்வதற்கு முன், காவல்துறை அதிகாரிகளிடம் விவேகத்தின் ஒரு கூறு தேவைப்படுகிறது. இந்த தேவை, என் பார்வையில், 'ஒயிட் காலர்' குற்றங்களில் அதிக சக்தியுடன் பொருந்தும்,' என்று அவர் கூறினார். 'காரணம், தடைசெய்யப்பட்ட பரிவர்த்தனை முற்றிலும் வணிகப் பரிவர்த்தனையா அல்லது தவறாக நடந்ததா அல்லது சந்தேகத்திற்குரிய நபருக்கு மோசடி செய்யும் நோக்கம் இருந்ததா என்பதைக் கண்டறிய வேண்டும்.'

கொழும்பு - 5 பகுதியைச் சேர்ந்தவரான கணேசன் சாம்சன் ரோய் என்பவர் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சவீன் சதுரங்க என்பவரக்கு எதிராகத் தொடுத்த வழக்கிலேயே நீதிமன்றம் இந்த முக்கிய தீர்ப்பை வழங்கியுள்ளது.

ரோயின் மைத்துனியாக இருந்தவரான ரெஹானா என்பவர் சவீன் சதுரங்கவிடம் இருந்து கடன் பெறுவதற்கு ரோயின் வங்கிக் கணக்கைப் பயன்படுத்திக் கொண்டதுடன்தான் இந்தப் பிரச்சினை தொடங்கியது. சவீன் கட்டம் கட்டமாக 7 மில்லியன் ரூபாய் பணத்தை ரோயின் வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டுள்ளார்.

சிறிது காலத்தின் பின்னர் தனக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய பணத்தை ரெஹானா தரவில்லை என்று சவீன் குற்றஞ்சுமத்தினார். பொலிஸாரை நாடினார். ஆனால், தான் அந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்தி விட்டார் என்பதற்கான ஆதாரங்களை ரெஹானா பொலிஸாரிடம் சமர்ப்பித்திருந்தார். ஆனால், தான் ரோயின் வங்கிக் கணக்கிற்கு பணத்தைச் செலுத்தினார் என்றும் அவர் தனக்குப் பணத்தைத் திருப்பிச் செலுத்தவில்லை என்றும் சவீன் குற்றஞ்சாட்டினார். அவர்களை மிரட்டுவதற்காக குற்றப்புலனாய்வுத்திணைக்கத்தில் முறைப்பாடு ஒன்றும் கொடுத்தார்.

தனக்கு பிஎம்டபிள்யூ கார் ஒன்றை இறக்குமதி செய்து தருவார்கள் என்று தெரிவித்தே தன்னிடம் இருந்து ரோயும் ரெஹானாவும் பணத்தைப் பெற்றனர் என்றும் ஆனால் காரையும் தரவில்லை பணத்தையும் தரவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் அவர் தெரிவித்தார்.

அந்த முறைப்பாடு வழங்கப்பட்டு 5 மாதங்களின் பின்னர் ரோய் சீனா மற்றும் மலேசியாவுக்கு சுற்றுலாச் செல்லப் புறப்பட்ட சமயத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அப்போதுதான் அவருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதும் அதன் மீது அவர் வெளிநாடு செல்வதற்கான நீதிமன்றத் தடை பெறப்பட்டுள்ளது என்றும் அவருக்குத் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட ரோய் நீதிவான் மன்றத்தால் 8 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பின்னர் நடந்த வழக்கில் வாகனம் வாங்கித் தருவதாகக் கூறி ரோய் பணம் பெற்றார் என்பதற்கான ஆதாரங்கள் எதனையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. இதனால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் ரோய் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கும் சவீனுக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்தார்.

வழக்கை விசாரித்த நீதியரசர்கள், புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளையும் சவீன் சதுரங்கவையும் குற்றவாளிகள் கண்டனர். அதன்படி சவீனுக்கு பொய்க் குற்றச்சாட்டுச் சுமத்தியமைக்காக 30 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுத் திணைக்கள பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எம்.எம்.ஜானக மார்சிங்க 75 ஆயிரம் ரூபாயும் ஏனைய இரு அதிகாரிகள் தலா 25 ஆயிரம் ரூபாயும் இழப்பீடு தரவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதியரசர்கள் ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரும் இணைந்து இந்தத் தீர்ப்பை வழங்கினர்.

நீதிமன்றம் தனது தீர்ப்பில், மனுதாரர் செய்த முறைப்பாட்டின் மீது விசாரணை நடத்தி அதில் உண்மை இருப்பதற்கான சாத்தியங்கள் குறித்த ஆராய்வதற்கு பொலிஸ் அதிகாரிகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது அதிர்ச்சியளிக்கும் விடயம் என்று தெரிவித்துள்ளது.

முறைப்பாட்டின் நம்பகத்தன்மை மற்றும் சதுரங்க சொல்வதைப் போன்று நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா என்பது குறித்து எந்த விசாரணைகளும் நடத்தப்படாமல் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று நீதிமன்றம் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

இப்படி விசாரிக்காமல் நடவடிக்கை எடுத்தமை தவறு என்பதற்காகவே பொலிஸ் அதிகாரிகள் வழக்காளிகளுக்கு இழப்பீடு செலுத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பல சமயங்களில் பொலிஸார் இவ்வாறு தமக்கு நெருக்கமானவர்களுக்காக அல்லது பணத்தைப் பெற்றுக் கொண்டு எதிராளிகளைக் கைது செய்து சிறையில் அடைப்பதைச் செய்து வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இந்தத் தீர்ப்பு ஒரு பாடமாக இருக்கும். இனிமேல் முறையான விசாரணை நடத்தி குற்றம் நிகழ்த்தப்பட்டமைக்கான ஆதாரங்களைத் திரட்டாமல் கைது செய்யப்பட்டால் இப்படித் தாமும் தண்டம் கட்ட வேண்டி வரும் என்கிற அச்சம் பொலிஸாருக்கு வரும். அதுவே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதுதான்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தங்களற்ற வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அரசியல் தலைவர்கள் தமக்கு தேவையானவர்களை பாதுகாக்காது, வெளிப்படைத்தன்மையுடன் உண்மைகளை கண்டறிவதை நோக்கமாகக் கொண்டு குற்றவாளிகளை வெளிப்படுத்தவதற்காக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்தச் செயற்பாட்டில் எந்த விதமான அழுத்தங்களையும் பிரயோகிக்காது முறையான முயற்சிகளை முன்னெடுக்கின்றபோது எமக்கு சர்வதேச விசாரணைக்கு செல்ல வேண்டிய தேவை கிடையாது -என்றார்.

முன்னதாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்காத காரணத்தால் சர்வதேச விசாரணையே நடத்தப்படவேண்டும் என்று அவர் வலியுறுத்தி வந்தார்.

## 4 அமைச்சு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கவில்லை என்றும் தெரியவருகின்றது.

முன்னதாக, நான்கு புதிய அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தபோதும், தற்போது அந்த முடிவு மாற்றப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக, இரண்டுக்கும் மேற்பட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகளை கொண்டிருக்கும் அமைச்சர்களிடம் தலா ஒவ்வொரு அமைச்சுக்களைப் மீளப்பெற்று புதியவர்களை அமைச்சரவைக்குள் கொண்டு வருவதே நோக்கமாக இருந்தது.

இருப்பினும், அடுத்து வருவது தேர்தல் ஆண்டு என்பதால் அது ஜனாதிபதிக்கு எதிர்மறையான விளைவுகளை தோற்றுவிக்கும் என்பதன் காரணமாக அந்த முயற்சியை அவர் இறுதி நேரத்தில் கைவிட்டுள்ளதாகவும் தற்போதைக்கு மாற்றங்களை மட்டுமே செய்யவுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கிடையே பொதுஜனபெரமுனவின் ஸ்தாபகத் தலைவர் பஷில் ராஜபக்ஷ இறுதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோது அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஏற்கனவே தம்மால் வழங்கப்பட்ட பட்டியலையும் நினைவுபடுத்தியிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் எதிர்வரும் 2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட சமர்ப்பிப்புக்கு முன்னதாக அமைச்சரவை மாற்றம் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## எக்ஸ்பிரஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனம் ஆராய்ந்து வருவகிறது என்றுள்ளது.

## சீன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபவர்கள் மற்றும் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும் வீடுகள் குறித்த ஒப்பந்தம் அடுத்த மாதம் சீனாவின் பீஜிங்கில் நடைபெறும் ஒரே பாதை மற்றும் மண்டலம் முன்முயற்சி திட்டத்தின் உச்சிமாநாட்டின் போது ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படவுள்ள.

1996 வீட்டு அலகுகளில் இந்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 108 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வீட்டு அலகுகள் பழதுறு வத்த பகுதியில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அதன்படி குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1888 வீடுகள் ஒதுக்கப்படவுள்ளதோடு, இந்த வீடமைப்புத் திட்டத்துக்காக சீன அரசாங்கம் இலங்கைக்கு 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்கவுள்ளது. இத்திட்டத்துக்காக செலவிடப்படும் வரிப்பணம், காணி சுவீகரிப்புக்கான செலவு, காணி அபிவிருத்திக்கான செலவு, வடிவமைப்பு வேலைக்கான செலவு மற்றும் அடிப்படை விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான செலவு, டெண்டர் பணிக்கான செலவு மற்றும் கழிவுநீர் வசதிகளின் செலவு என்பன இலங்கை அரசால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான பரிமாற்றக் கடிதத்தில் சீன மக்கள் குடியரசும் இலங்கை அரசும் கடந்த ஜனவரி 9ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வசிப்பவர்களின் குடியேற்றப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும் என்றுள்ளது.

# கிளிநொச்சியிலும் திலீபனுக்கு அஞ்சலி





இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சிக் கிளையினால் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இராமநாதபுரம் வட்டாரத்தின் ஏற்பாட்டில் வட்டக்கட்சி பொதுச் சந்தைக்கு முன்பாக இராசையா திலீபன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடர் ஏற்றப்பட்டு திலீபனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இலங்கையில் தியாகி திலீபனின் நினைவு தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்வோர் புலனாய்வாளர்களால் அச்சுறுத்தப்படுகின்றனர் என்று தெரிவித்தார். ''நிகழ்வை ஏற்பாடு செய்பவர்களுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, நிகழ்வை யார் செய்யச் சொன்னது, எதற்காகச் செய்கிறீர்கள் என அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது'' என்றார் அவர். (113)

## சந்தோஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதியில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சந்தோஷ் நாராயணனின் மனைவி மீனாட்சி சந்தோஷ் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்தவர். புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார்.

யாழ்ப்பாணம் வந்த சந்தோஸ் நாராயணனின் குடும்பத்தினரை ஈழத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி குமரன் வரவேற்றார்.

அதன் பின்னர் சந்தோஸ் நாராயணன் மற்றும் அவரது மனைவி மீனாட்சி உள்ளிட்டவர்கள் கோண்டாவில் உப்புடம் விநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கள வாத்தியத்துடன் கோண்டாவிலில் அமைந்துள்ள சந்தோஸ் நாராயணன் மனைவியின் பூர்வீக இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு ரசிகர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் சந்தோஸ் நாராயணனுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

சந்தோஸ் நாராயணன் ஒக்டோபர் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மாலை 4 மணிக்கு 'யாழ் கானம்' எனம் பெரும் இசை நிகழ்ச்சி நடத்தவுள்ளார்.

## உள்நாட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டனவா என்றால் இல்லை.

குறிப்பாக, குறித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளில் அற நெறிப் பாடசாலை முறைமை நிறுத்தப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

விசேடமாக, மதரஸாக்கள் மற்றும் ஷரீயா அமைப்புக்கள் உள்ளிட்டவையும் தடைசெய்யப்பட வேண்டுமென்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது மட்டக்களப்பில் மிகப்பெரும் ஷரீயா பல்கலைக்கழகம் உரிமையாளரிடத்தில் ஒப்படைக்கப்பட்டு மீள இயக்குவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆகவே, உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் ஊடாக உண்மையும், நீதியும் நிலைநாட்டப்படவில்லையாயின் சர்வதேச விசாரணைக்குச் செல்ல வேண்டிய நிலைமையே ஏற்படும் -என்றார்.

## ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினார்.

இந்நிலையில் அவர் தற்போது ஜேர்மனியில் நடைபெற்ற 'பெர்லின் குளோபல்' மாநாட்டின் முதல் நாள் தலைவர்களின் உரையாடல் அமர்வின் ஆரம்ப உரையை நிகழ்த்துவதற்காக இரண்டு நாட்கள் பயணமாக அடுத்த வாரம் அவர் ஜேர்மனுக்குச் செல்லவுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் நிதியமைச்சின் ஆலோசகர் தேஷால் டி மெல் ஆகியோர் ஜேர்மன் தலைவர் மற்றும் அந்நாட்டு அரச பிரதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

இதனையடுத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

## நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள பண மோசடி முறைகளில் ரியல் எஸ்டேட் முகவர்கள், வங்கித்துறை மற்றும் நிதி நிறுவனங்கள் இரண்டாவது இடத்தில் உள்ளது.

பண மோசடி என்பது நிதி சொத்துகளை சட்டவிரோதமாகப் பெறுதல் மற்றும் சம்பாதிக்கப்பட்ட முறைமை என்பவற்றை வெளியிடாமல் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கி தனது அண்மைய அறிக்கையில் பண மோசடி தடுப்பு தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகின்றது என்றுள்ளது.

## புளொட்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமூலங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அவற்றை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

அதுமட்டுமல்ல, அடுத்து வரும் காலத்தில் குறித்த அடக்குமுறையை பிரயோகிப்பதை நோக்கமாக கொண்டுவரும் சட்டமூலத்தினை தடுத்து நிறுத்துவதற்கான அனைத்து செயற்பாடுகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளோம் - என்றார்.

# சில அரசியல் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முயற்சி

## சமன் ரத்னப்பிரிய கூறுகிறார்



நாட்டிற்குள் இனவாத மோதல்களை ஏற்படுத்தி தங்களது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள சில அரசியல் குழுக்கள் முயற்சித்து வருவதாக ஜனாதிபதியின் தொழிற்சங்க தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

முப்பது வருட யுத்தம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவாக நாடு அரசியல் பொருளாதார ரீதியில் சரிவடைந்து கிடந்த நிலையில், தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டு வரும்போது நாட்டுக்குள் மீண்டும் இனவாத மோதல்கள் அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின்தற்போதையநிலையை அறிவிக்கும் நோக்கில் சிவில் அமைப்புக்கள் கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர் -

சில அரசியல் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளில் தலையீடு செய்து வருகின்றனர்.

சனல் 4 விவகாரம் தொடர்பில் நாடாளுமன்றத்திற்குள்ளும் சில தலையீடுகள் காணப்படுகின்றன. சில அரசியல் குழுக்கள் பல்வேறுபட்ட நிலைப்பாடுகளை முன்வைக்கின்றன. அது தொடர்பிலான சரியான விசாரணையை நடத்த அரசாங்கம் முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது ஜனாதிபதியின் தலையீட்டின் கீழ் அது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர்கள் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு அது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும். அதேபோல் ஆளும் தரப்பும் தெரிவுக்குழுவொன்றை நிறுவுமாறு கோரிக்கை விடுத்திருந்தது. அங்கு விருப்பமானவர்கள் சுதந்திரமாகத் தங்களதுகருத்துக்களைத்தெரிவிக்க முடியும். இருப்பினும்அந்தத் தகவல்களை சமூகமயப்படுத்தும் போது கவனமாக செயற்பட வேண்டியது அவசியம் என்பதோடு அதுகுறித்த விசாரணைகள் அவசி யமில்லை என்றுஎவரும்வலியுறுத்தவில்லை.

பாதுகாப்பு அமைச்சு அந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ள போதும் எதிர்க்கட்சி போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்தியது. அதனால் அதனை மேற்கொண்டவர்களைக்கண்டறிய வேண்டியது அவசியம். அதற்காக சர்வதேச ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதும் தவறாகாது.

சில குழுக்கள் நாட்டிற்குள் அரசியல் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். குருந்தூர் விகாரை மற்றும் திலீபனின் நினைவுத்தின அனுட்டிப்பு உள்ளிட்ட விடயங்களில்அதுதெரிய-வந்துள்ளது. அதனால் அரசியல் நோக்கங்களுக்காக நாட்டைப் படுகுழியில் தள்ளிவிட முற்படாதீர்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் இந்நாட்டில் இடம்பெற்ற யுத்தம் என்பன கசப்பான அனுபவங்களையே தந்தன. நாடு பொருளாதார ரீதியில் சற்று தலையெடுக்க ஆரம்பித்துள்ள வேளையில் அதற்குப் பாதகம் விளைவிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

சுகாதார துறைக்குள் சில தொழிற்சங்க செயற்பாடுகள் காணப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகளை வழங்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளார். அதற்கமைய சம்பளம் அல்லது கொடுப்பனவுகளில் அதிகரிப்பை மேற்கொள்ள வாய்ப்புள்ளது.

சில குழுக்கள் ஆர்ப்பாட்டங்களை செய்துவிட்டு அவர்களின் ஆர்ப்பாட்டங்களின் பலனாக சம்பள அதிகரிப்பு கிட்டியது என கூறிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். வங்குரோத்து நிலையிலிருக்கும் நாட்டை சரிவுப் பாதைக்குள் தள்ளி விடாமல் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேற்ற வேண்டும் என்பதே காலத்தின் தேவையாகும்.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் போதும் அதற்கு எதிராக மக்களைத் தூண்டிவிடும் முயற்சிகளில் சிலர் ஈடுபட்டனர். ஆனால் மக்கள் வீதிகளில் இறங் காமல் அமைதியாக ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவளித்தனர். அதனால் நாட்டின் நிலைமைகளை அறிந்துகொண்டு செயற்பட வேண்டும் எனத் தெரி வித்தார்.


முன்னாள் ஆளுநரும் ஜனாதிபதியின் மக்கள் அலுவல்கள் பணிப்பாளருமான கீர்த்தி தென்னகோன் தெரிவிக்கையில் -

நாட்டில் வைத்தியர்களின் விடுமுறை தொடர்பில் போலியான பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது. அதனால் உண்மையான பிரச்சினைகளை மறைக்க முற் படுகின்றனர். நாட்டிலுள்ள 6,000 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகின்ற போதும் நாட்டிலுள்ள வைத்தியசாலைகளிலும் பெருமளவான வைத்தியர்கள் சேவையில் உள்ளனர். ஐக்கிய சமூக சங்கத்தின் தலைவர் புலஸ்தி வன்னியராச்சி கூறுகையில் -

சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பதற்கான சட்டமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளமையும், அதுகுறித்து ஜனாதிபதி தனது அமெரிக்க விஜயத்தின் போது மேடா நிறுவனத்தின் பிரதானியை சந்தித்து அறிவுறுத்தியமையும் வரவேற்புக்குரியது. நாளாந்த இணைய குற்றங்கள் தொடர்பிலான 14,000 முறைபாடுகள் பதிவாகின்றன. 9000 முறைபாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகின்றன. எனவே இவ்வாறானதொரு சட்டம் மிகவும் அவசியமானது.

இந்த ஊடக சந்திப்பில் சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் துசித பெரேரா, லக்வனிதா அமைப்பின் சட்ட ஆலோசகர் கௌசலி சமரதுங்க, சிவில் சங்கம் மற்றும் தொழிற்சங்க அமைப்பின் உறுப்பினர் சுப்பையா ஆனந்தகுமார் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர். (05)

# பாலியல் குற்ற சந்தேகநபரைக் கைதுசெய்ய பொதுமக்கள் உதவியை நாடும் பொலிஸார்



தனது சொந்த மகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திவிட்டு தப்பிச் சென்றார் என்று சந்தேகிக்கப்படும் நபரின் புகைப்படத்தை வெளியிட்டுள்ள பொலிஸார் அவர் தொடர்பான தகவல்களைத் தருமாறு பொலி-ஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

9 வயதான மகளை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட சந்தேக நபரான தந்தையின் புகைப்படத்தை மாவத்தகம பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

குறித்த நபர் 942913940 வி என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்குரிய 29 வயதுடையவர் எனவும் மிரிஸ்ஸ படல்கே கிஹான் தனுஷ்க எனவும் இலக்கம் 95/02, பிரியந்தி நிவாச, பபுராவ, வலஸ்முல்ல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் மாவத்தகம பொலிஸ் பொறுப்பதிகாரியிடமோ அல்லது 0372299222, 0718 591258 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ உடனடியாக தெரிவிக்குமாறு பொலி-ஸார் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பொறுப்பதிகாரியின் 071859702 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் தகவல் வழங்க முடியுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# கருத்துச் சுதந்திரத்தை இழந்து ஸ்திரதன்மையை பெறமுடியாது

## அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இடித்துரைப்பு

கருத்துசுதந்திரத்தை இழந்து ஸ்திரதன்மையை பெற்றுக்கொள்ளக்கூடாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கருத்துச்சுதந்திரதின் மதிப்புகளை தியாகம்செய்வதன்மூலம் ஸ்திரதன்மையை பெற்றுக்கொள்ளக்கூடாது என அவர் கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச சமாதான நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எதிர்காலம் குறித்து இலட்சியத்துடன் இருப்போம் பொருளாதார ஸ்திரதன்மை குறித்த இலட்சியம்-அரசியல் ஸ்திரதன்மை புதுமையைக் கட்டியெழுப்புதல் போன்ற இலட்சியங்கள் எனத் தெரிவித்துள்ள அவர் அதேவேளை நாங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் ஊழலிற்கு எதிரான மாற்றங்கள் குறித்தும் இலட்சியங்களுடன் காணப்படுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் உலகத் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஒன்றுகூடினார்கள். சமாதானம் பற்றி அதிகளவில் பேசப்பட்டது. ஆனால் சமாதானம் என்பது கரங்களில் சிக்காத விடயமாக இருக்கலாம். உக்ரைனின் ஈவிரக்கமற்ற ஆக்கிரமிப்பு சூடானின் மனிதாபிமானநெருக்கடி போன்றவற்றின் மூலம் இதனை நாங்கள் பார்க்க முடிகின்றது எனவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

சமாதானம் எப்படி ஒரு நாள் காணப்படும் மறுநாள் மாற்றமடையும் இல்லாமல் போகும் எனத் தெரிவித்துள்ள அவர் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்த பல வருடங்கள் எடுக்கலாம் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

சர்வதேச அளவில் நாங்கள் ஜனநாயகங்கள் ஆபத்தில் உள்ளதைப் பார்க்கின்றோம். சில ஆபத்துக்கள் உள்ளேயிருந்து வருகின்றன - மனக்கசப்புகளை பயன்படுத்துபவர்களால் சமாதானத்திற்கு பதில் அச்சத்தை ஏற்ப டுத்துபவர்களால் அவை தூண்டப்படுகின் றன எனவும் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (05)

# திருகோணமலையை முன்னிலைப்படுத்தி இனவாத முரண்பாட்டை தோற்றுவிக்க அரசு முயற்சிக்கிறதா?

## சாணக்கியன் இராசமாணிக்கம் கேள்வி

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மூவின மக்களும் வாழ்கிறார்கள். அண்மை காலமாக திருகோணமலை மாவட்டத்தில் இனவாத முரண்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம், தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிள்ளையானின் ஊடக செயலாளராகப் பதவி வகித்த அசாத் மௌலானா பல விடயங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, முறையான விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்த போது அவர் பிறப்பித்த கட்டளைக்கு அமைய லசந்த விக்கிரமசிங்க, பரராஜசிங்கம் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டுள்ள குறிப்பிடப்படுகிறது. ஆகவே இந்தப் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசாரணைகள் வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ, பாதுகாப்பு பிரதானிகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் நிலையில் எவ்வாறு தேசிய மட்டத்தில் வெளிப்படையான விசாரணைகளை எதிர்பார்க்க முடியும். தமிழ் இனப்படுகொலை தொடர்பில் நாங்கள் சர்வதேச விசாரணைகளைக் கோரிய போது ஒரு தரப்பினர் எம்மை விமர்சித்தார்கள். ஆனால் இன்று அவர்கள் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு சர்வதேச விசாரணையை கோருகிறார்கள். ஆகவே தேசிய மட்டத்திலான விசாரணைகள் மீது நம்பிக்கை கிடையாது. ஆகவே சர்வதேச விசாரணைகளையே நாங்களும் கோருகிறோம்.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மூவின மக்களும் வாழ்கிறார்கள். அண்மை காலமாக திருகோணமலை மாவட்டத்தில் இனவாத முரண்பாடுகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இனவாத முரண் பாடுகளைத் தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் தோற்றம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல்வாதிகளும் சந்தேகத்துக்கிடமான வகையில் செயற்படுகிறார்கள்.



அரசாங்கத்துக்குச் சார்பாகச் செயற்படும் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்வாதிகள் மக்களின் பிரச்சினையை மறந்து தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குப் போராடுகிறார்கள். கொலை, கடத்தல் உள்ளிட்ட பல குற்றங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவே தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்காமல் மீண்டும் சிறைசெல்வதைத் தடுக்கப் போராடும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பிள்ளையான் பதவி விலக வேண்டும்.

திரிபோலி குழுவுக்கு தலைமை தாங்கும் பிள்ளையானின் அரசாங்கத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலுக்கு ஒருபோதும் நியாயம் கிடைக்காது. - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சொல்லும் செயலும்

ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகளை வெளிப்படுத்துவதில் இலங்கை எப்போதுமே பிரபலமாக இருக்கின்றது. அந்தந்த நேரத்தில் நிலமையைச் சமாளிக்க வாயில் வந்ததை அரசியல்வாதிகள் கூறிவிடுவதால் பெரும்பாலும் இந்த நிலமை ஏற்படுகின்றது. அதனால் பொது மக்களுக்கு எவ்வளவு தூரம் பாதிப்பும் பதகளிப்பும் ஏற்படுகின்றதுஎன்பதுபற்றிஅவர்கள்அக்கறைப்படுவதில்லை. அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உண்மைகளை பொதுமக்களிடமிருந்து மறைக்க தகவல்களைப் புரட்டிப் போடுகிறார்கள்.

அண்மையில் நாட்டின் உணவு இருப்புத் தொடர்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்ட கருத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். செப்டம்பர் 23 கன்னொருவையில் நடைபெற்ற கூட்டமொன்றில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்த கருத்து, நெல் மற்றும் அரிசியில் நாடு தன்னிறைவு நிலையை அடைந்துள்ளது என்பதாகும். ”அடுத்த பெரும்போக நெல் அறுவடை வரை (இதாவது பெப்ரவரி, மார்ச் வரை ) நாட்டில் போதுமான அரிசி மற்றும் நெல் கையிருப்பு உள்ளது. எனவே, மீண்டும் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை” என்று அமைச்சர் தெரிவித்தார்.

அன்றைய தினமே, அமைச்சின் செயலாளர் வேறொரு செய்தியாளரிடம் பேசுகையில், ஜனவரி மாதம் வரை மட்டுமேபோதியளவு அரிசி இருப்பில் உள்ளது என்று எச்சரித்தார். இவர்களில் யார் சொல்வது சரி? இருவருமே சரியாக என்ன சொல்ல விரும்புகிறார்கள்? இவற்றில் எந்த அறிக்கையை பொதுமக்கள் தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டும்? ஒருபுறம், நாங்கள் மீண்டும் அரிசியை இறக்குமதி செய்ய வேண்டியதில்லை என்று அமைச்சர் கூறுகிறார். வேறு ஒரு மன்றத்தில் அமைச்சின் செயலாளர் முற்றிலும் மாறுபட்ட படத்தை வரைகிறார்.

செயலாளரின் கூற்றுப்படி, 62,141 ஏக்கர் பயிரிடப்பட்ட பெரும்பாலும் நெற்பயிர்கள் வறட்சி காரமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் உணவுப் பாதுகாப்புக் கேள்விக்குறியாகியுள்ளது. இது நடக்கலாம் அல்லது எதிர்மாறாக நடக்கலாம் என்று அமைச்சர்களும் அதிகார வர்க்கமும் கூறுவதை இந்த நாட்டு மக்கள் விரும்பவில்லை. இத்தகைய நிலைமையை எதிர்கொள்வதற்குத் தமது திணைக்களங்களும் அமைச்சுக்களும் எவ்வாறு தயாராக உள்ளன என்பதை மக்களுக்கு தெரியப்படுத்துவதே அவர்களின் கடமையாகும். எதிர்பாராத அவசரங்களைச் சந்திக்கும் திட்டங்கள் உள்ளனவா இல்லையா?

நிதி நெருக்கடியின் உச்சக்கட்டத்தின்போது பொருட்கள் எதுவும் கிடைக்காமல் மிகவும் கடினமான இரண்டு மாதங்களை மக்கள் எதிர்கொள்ளவேண்டி இருந்தது. அந்தக் காலக்கட்டத்தில் சாதாரண மக்கள் கையில் காசு இருந்தாலும், கடைகளிலும், பல்பொருள் அங்காடிகளிலும் சரக்குகள் இருப்பதில்லை. எங்கள் வீடுகளில் குறைந்த அளவு உணவே இருந்தாலும், அவற்றை சமைக்க நாட்டில் சமையல் எரிவாயுவும் இருக்கவில்லை. ஆனால் அந்தக் காலம் கடந்துவிட்டது. அதிலிருந்து பாடம் கற்று இனியாவது சரியான வழியில் செல்லவேண்டாமா?

நமது அரசியல்வாதிகளின் முட்டாள்தனங்களால் எதிர்கொள்ளப்பட்ட இந்தப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா 4 பில்லியன் டொலர்களுக்கு மேல் கடன் வசதியை வழங்கி உதவியது. தொடர்ந்தும் அத்தகைய உதவிகளிலேதான் நாடு தங்கியிருக்கப் போகிறதா?

நாடு இன்னும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரவில்லை. எரிபொருள் பங்கீட்டு முறை நீக்கம், கடைகளில்பொருள்களைப்பெறமுடிவதுஎன்பனவெல்லாம் தற்காலிகமானது. எப்போது வேணடுமானாலும் மாற்றமடையலாம். அப்படிப்பட்ட நிலையில், எதிர்காலம் இன்னும் உறுதியாகத் தெரியாத நிலையில், எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்வதற்குத் தயாரான நிலையில் மக்கள் இருக்க அரசிடம் என்னென்ன திட்டங்கள் உள்ளன? அவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்தும் தேவை அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் உண்டு.

ஒருவேளை உள்நாட்டு நெல் உற்பத்தியில் பற்றாக்குறையை எதிர்கொள்வது எப்படி என்பது குறித்து அரசாங்கத்திடம் ஒரு திட்டம் உள்ளதா?



# காலங்கடந்த கனவா காலிஸ்தான் தனிநாடு ?

## கனடா-இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகல்

ஐங்கரன் விக்கினேஸ்வரா




(கனடா-இந்தியா உறவில் உச்சக் கட்ட முறுகலை ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலையே தோற்றுவித்துள்ளது.

இவர்கனடாவின்குடிமகனாக, சீக்கியர்களின் போராளியாக, இந்தியாவின் பயங்கரவாதி யாக அவரவர் பார்வைக்கு புலப்படுகிறார்)

இந்தியாவின் உணவுக் கூடையாக திகழ்ந்து வரும் பஞ் சாப் மாநிலம், ஒப்பீட்டளவில் வளர்ச்சியான மாநிலமாக விளங்கினாலும், அங்கே தற்போது வேலையின்மை பிரச்சனைகளும், விவசாய பிரச்னைகளும் அதன் சமூக மற்றும் பொருளாதார நிலையை சுருக்கி விட்டதாக பொருளாதர நிபுணர்கள் கூறுகின்றனர்.

### சீக்கியர்களுக்கு தனி நாடு

1980களில் சீக்கியர்களுக்கு தனி தேசம் வேண்டுமென எழுந்த கிளர்ச்சி, பத்தாண்டுகள் வரை நீடித்து வந்தது. இந்த காலகட்டத்தில், பல முக்கிய தலைவர்களும், பொது மக்களும் பாதிக்கப்பட்டனர். பல இளம் சீக்கியர்கள் காவல் துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்த வன்முறையால் ஏற் பட்ட காயங்களின் சுவடுகளை பஞ்சாப் மாநிலம் இன்றும் சும ந்து கொண்டுதான் இருக்கிறது.

சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டும் என கூறப்படும் கோரிக்கை இன்னும் தொடர்ந்து வந்தாலும், 1990களில் அந்த கோரிக்கை அதன் முக்கியத்து-வத்தை இழந்துவிட்டது.

### கனடா-இந்தியா முறுகல்

கனடாவில் சீக்கிய காலிஸ் தானிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டமை தொடர்பில், இந்திய ராஜதந் திரி ஒருவரை கனேடிய அரசு நாட்டில் இருந்து வெளியேறு மாறு அறிவித்தது. ஹர்தீப் சிங் நிஜ் ஜார் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத் தின் பின்னணியில் இந்திய அரசு இருக்கலாம் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்திருந்தார்.

ஹர்தீப் சிங்கின் இறப்பிற்கும் இந்திய அரசுக்கும் இடையே நம்பகமான தொடர்பை கனடா உளவுத்துறை கண்டறிந்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இந்திய அரசின் முக வர்களுக்கும், கனடா குடிமகனின் படுகொலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி கனடா புலனாய்வு துறைகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றன என கூறியுள்ளார். கனடாவில் குடிமகன் ஒருவர் படுகொலையில் அந்நிய வெளிநாட்டு அரசின் தொடர்பு இருப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அழுத்திக் கூறி யுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்தி யாவுக்கான கனடா தூதர் கேம ரூன் மெக்கேவை செப்டெம்பர் 19 அன்று இந்திய வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு, கனடிய இராஜதந்திரி ஒருவர் அடுத்த ஐந்து நாட்களுக்குள் இந்தி யாவை விட்டு வெளியேறவேண் டும் என்று அறுவுறுத்தப்பட்டுள் ளார்.

இந்தியாவின் உள் விவகாரங் களில் கனேடிய ராஜதந்திரியின் தலையீடு மற்றும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

### காலிஸ்தான் உருவாக்க பின்னணி

காலிஸ்தான் (Khalistan movement) என்பது சீக்கிய மதம் சார்ந்த தேசியத்தை வலியுறுத்தும் ஓர் அரசியல் இயக்கமாகும். சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு காலிஸ்தான் என்ற பெயரில் இந்தியாவின் பஞ்சாப் மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாப் என சீக்கியர்கள் அதிகம் வசிக்கும் மாகாணங்களை இணைத்து தனி நாடு வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஜர்னை யில் சிங் பிந்தரன்வாலாவால் அமை க்கப்பட்டதுதான் காலிஸ்தான் இயக்கம்.

பஞ்சாபில் 1970களின் இறுதி யில் தொடங்கிய இந்த இயக்கத் தின் கிளர்ச்சியானது காலிஸ்தான் தனிநாட்டுக் கோரிக்கை யாக எழுந்தது. கிளர்ச்சிக்கான அடிப் படைக் காரணங்கள் மிகவும் சிக்கலானவை. முதன்மைக் காரணங்களாக சீக்கியத் திற்கும் பஞ்சாபி மொழிக்கும் போதிய அங்கீகாரம் வழங்கா ததும் 1947இலிருந்து ஆட்சியி லிருந்த இந்தியக் காங்கிரஸ் அரசின் அக்கறையின்மையும் அமைந்தன.




### இந்தி மொழி திணிப்பு

1950களில் பஞ்சாபின் அனைத்துப் பள்ளிகளும் பஞ் சாபி மாணவர்களுக்கு இந்தி கற்பித்ததால் பெற்றோர்களும் சமூகத் தலைவர்களும் கவலையுற்றனர். மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் பஞ்சாபின் அலுவல்மொழியாக பஞ்சாபியை மீளமைக்கவும் பஞ்சாப் தனிமாநில இயக்கம் தொடங்கப்பட்டது. பஞ்சாப் தனி மாநில இயக்கத்தை ஏப்ரல் 14, 1955 அன்று இந்திய அரசு தடை செய்தது.

இந்தக் காலகட்டத்தில் சீக்கியர்கள்பெரும்கேலிகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாயினர் என்பதைமறுக்கமுடியாது. அமைதி வழியில் போராடியவர்களும் அப்பாவி மக்களும் தடிகளாலும் கற்களாலும் அடிக்கப்பட்டனர். பலர் கைதாகினர், சீக்கிய கோயில்க ளில் தேடுதல் வேட்டை நடந்து, அவை சேதமாக்கப்பட்டன.

பஞ்சாப் மாகாணம் சீக்கியர் களின் பாரம்பரிய நிலப்பகுதி யாகும். இந்திய நிலப்பகுதிகள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற் குள் வருவருதற்கு முன் சுமார் 50 ஆண்டுகள் இப்பகுதிகளை சீக்கிய அரச பரம்பரையினர் ஆண்டனர்.

இந்திய பாகிஸ்தானிய பிரி வினைக்குப் பின் பெருமளவில் சீக்கியர்கள் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்திலிருந்து இந்தியாவின் பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசத்திற்கு குடியேறினர்.

### மொழிவாரி மாநில எழுச்சி

பின்னர் மொழிவாரி மாநிலங்கள் பிரிவினையின் அடிப்படையில் அதிக சீக்கியர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர் Kalaikkathir

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# அடுத்த கட்டத்துக்கு செல்வதே தேவை

### நீதி அமைச்சர் வலியுறுத்து



உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பில் காலம் காலமாக பேசுவதை விட அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக் கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம்,தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சி அரசாங்கத்தில் நான் நீதியமைச்சர் பதவியில் இருந்துக் கொண்டு பொறுப்புடன் ’இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் துருக்கி ஊடாக சிரியாவுக்கு சென்று ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பில் பயிற்சி பெற்றுள்ளார்கள் ’என்பதை சபைக்கு அறிவித்தேன்.இதனை நான் வெறும் பேச்சுக்காகவோ அல்லது சாட்சியங்கள் ஏதும் இல்லாமலோ குறிப்பிடவில்லை.

2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்கு முன்னர் நீதியமைச்சர் என்ற ரீதியில் நான் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் முதன் முறையாக கலந்துக் கொண்டேன்.அப்போது அரச புலனாய்வு பிரிவின் பிரதானி நிலந்த ஜயவர்தன நாட்டின் பாதுகாப்பு நிலை தொடர்பில் விரிவாக தெளிவுப்படுத்தினார்.பாதுகாப்பு சபை கூட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை ஆராய்ந்து நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பு சாதகமான நிலையில் இல்லை ஏதோ பெரும் விளைவு தோற்றம் பெறவுள்ளது என்பதை நான் உணர்ந்தேன்.

2016.11.18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதம் இடம்பெற்றது.அப்போது நீதியமைச் சர் என்ற ரீதியில் நான் ’இலங்கையில் இருந்து ஒரு தரப்பினர் சிரியாவுக்கு சென்று ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் பயிற்சி பெற்றுள்ளார்கள், பயிற்சியின் போது இலங்கையர் ஒருவர் சிரியாவில் படுகொலை செய்யப்பட்டுள்ளார். ஆகவே நாட்டின் பாதுகாப்பை அலட்சியப்படுத்த முடியாது.பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும் ’ என்று உரையாற்றினேன்.

எனது உரையை தொடந்து இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா எழுந்து ’இவ்வாறு பொய்யுரைத்தால் எமது இளைஞர்கள் ஆயுதம் தூக்குவார்கள்’ என்றார்.

எனது உரைக்கு எதிராக நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளர் ஊடக சந்திப்பை நடத்தி நீதியமைச்சர் விஜயதாஸ குறிப்பிடுவது பொய்,தேசிய பாதுகாப்பு பலமாக உள்ளது.எவரும் சிரியாவுக்கு செல்லவுமில்லை. ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் பயிற்சிப் பெறவுமில்லை என்று குறிப்பிட்டார். அதன் பின்னர் நான் இனவாதியாக கடுமையாக விமர்சிக்கப்பட்டேன்.ஒருசில ஊடகங்களும் நான் முஸ்லிம் சமூகத்தின் விரோதியாகவே என்னை விமர்சித்தன. சிரியாவுக்கு ஒரு தரப்பினர் சென்று அடிப்படைவாத பயிற்சி பெற்றதை நான் குறிப்பிட்டதை தொடர்ந்து கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் முக்கிய 50 பிரதிநிதிகள் என்னை சந்தித்தார்கள்.கிழக்கு மாகாணத்தில் ஆதிக்கம் பெற்றுள்ள அடிப்படைவாத செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பிட்டார்கள். பயங்கரவாதி சஹ்ரான் தொடர்பில் பாரிய சந்தேகங்கள் நாட்டு மக்கள் மத்தியில் இருந்தது.

பயங்கரவாதி சஹ்ரான் முதலில் காத்தான்குடி பள்ளிவாசல் மீது தாக்குதல் மேற்கொண்டு சுதேச முஸ்லிம் ஒருவரையே கொலை செய்தார். விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை போன்றே சஹ்ரான் தமது இனத்தவரை கொன்று பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்.

2016.11.18 ஆம் திகதியில் இருந்து 2019.04.21 ஆம் திகதி வரை நான் இனவாதியாகவே சித்தரிக்கப்பட்டேன். குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற போது நான் அமைச்சராக பதவி வகிக்கவில்லை.குண்டுத்தாக்குதல் இடம்பெற்று 250 இற்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டு,500 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பில் 24 மணித்தியாலத்துக்குள் சம்பவம் இடம்பெற்ற பகுதியின் பொலிஸ் நிலைய அதிகாரி நீதவான் நீதிமன்றத்துக்கு ’ பி’ அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் குண்டுத்தாக்குதல் இடம்பெற்று 7 நாட்கள் வரை நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கவில்லை.

2019.04.27 மற்றும் 28 ஆம் திகதிகளின் போது நான் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய பொலிஸ் அதிகாரிகளுக்கும்,பொலிஸ்மா அதிபருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் வலியுறுத்தினேன்.அதன் பின்னரே 2019.04.29 ஆம் திகதி பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய பி.அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் நாடு இரத்த வெள்ளத்தில் மூழ்கும் நிலையில் இருந்தது.பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தூரநோக்கத்துடன் செயற்பட்டு நாட்டை பாதுகாத்தார் என்பதை வெளிப்படைத் தன்மையுடன் குறிப்பிட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய வனாத்தவில்லு பகுதியில் ஆயுதங்கள்,வெடிப்பொருட்கள் மீட்பு,மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலை உடைப்பு உட்பட கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற அடிப்படைவாத செயற்பாடுகள் தொடர்பில் அப்போதைய ஆட்சி அவதானம் செலுத்தாமல் இருந்தது பிரச்சினைக்குரியது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம் தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. சனல் 4 தொலைக்காட்சி மீது எனக்கு நம்பிக்கையில்லை அது எனது தனிப்பட்ட நிலைப்பாடு.இலங்கை தொடர்பில் கடந்த காலங்களிலும் பல சோடிக்கப்பட்ட விடயங்களை முன்னிலைப்படுத்தி சனல் 4 இலங்கைக்கு எதிரான ஆவணப்படங்களை வெளியிட்டது.

சனல் 4 காணொளியை தொடர்ந்து பிள்ளையான் விடுதலை தொடர்பில் பேசப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் நீதிபதிகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு பின்னர் நீதிபதிகளின் சுயாதீனத்தன்மை கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பிள்ளையானுக்கு எதிராக முன் வைக்கப்பட்ட வழக்கில் போதிய விசாரணைகள் இல்லாத காரணத்தால் விசாரணைகளை முன்னெடுத்துக் கொண்டு செல்ல முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்தது.

இவ்விடயத்தில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை என்பதை உறுதியாக குறிப்பிட முடியும். ஆகவே நீதிமன்றகட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கருத்து தெரிவிப்பதை மக்கள் பிரதிநிதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நீதிமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை சிதைவடைந்தால் அது ஜனநாயக இருப்புக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுகிறது. ஆனால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.79 பேருக்கு எதிராக 42 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த எதிர்காலத்தை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு பிரதமர்,எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# எனது பணிச் சுமைகளைக் குறைப்பதற்காகவே அமெரிக்க நிகழ்வுகளில் மகன் பங்குகொண்டார்

## அலிசப்ரி விளக்கம்



ஐக்கியநாடுகள் பொதுச் சபையின் நிகழ்வுக்காக அமெரிக்காவிற்கு சென்றுள்ள தனக்குதனதுபணிச்சுமையை குறைப்பதற்காக தனது மகன் உதவினார் அதன் காரணமாக தன்னுடன் சில நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டார் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் வெளிவிவகார அமைச் சர் கலந்து கொண்ட நிகழ்வில் அவரது மகனும் காணப்படுகின்றமை தொடர்பாக சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் வெளியாகியுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் ருவிட்டரில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு -

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத்தொடரின் ஒரு பகுதியாக இடம்பெற்ற சந்திப்புகளில் என்னுடன் எனது மகன் கலந்துகொண்டமை குறித்து சமூக ஊடகங்களில் வெளியான கரிசனைகளைப் பார்த்தேன்

நான் உண்மைகளை உங்கள் முன் முன்வைக்கவிரும்புகின்றேன்.

ஜனாதிபதியின் உயர்மட்டத் தூதுக்குழுவிற்கு உதவுவதற்கு அப்பால் வெளிவிவகார அமைச்சர் என்ற அடிப்படையில் வோசிங்டன் ஐ.நாவிற்கான விஜயத்தின் போது நான் பல சந்திப்புகளில் ஈடுபடவேண்டியநிலையேற்பட்டது.

எனது பயண ஏற்பாடுகளில் பத்து உரைகள், மூன்று பொது-நிகழ்வுகள், பல இருதரப்பு பலதரப்பு நிகழ்வுகள், சந்திப்புகள் போன்றவை காணப்பட்டன- மிக அதிகமான பணி சுமை காரணமாக பெருமளவிற்கு ஆராயவேண்டிய - எழுதவேண்டிய - துல்லியமாகத் தயார்ப்படுத்தவேண்டிய அவசியம் காணப்பட்டது.

அமைச்சர்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்ற உதவுவதற்காக ஒவ்வொரு வரும் அமைச்சரவை பணியகத்தின் மூலம் நன்மையடைவோம் இதில் தொண்டர்களும் பணம் பெற்றுக்கொண்டுபணியாற்றுபவர்களும் காணப்படுவார்கள்.

எனது மகன் நான் வேண்டுகோள் விடுத்ததன் அடிப்படையில் ஆராய்ச்சி உதவியாளராகவும் நகல் எழுத்தாளராகவும் எனக்கு உதவினார்.

அமெரிக்காவில் அவர் தற்போது கல்விகற்றுவருபவர் என்பதால் அவர் தனது நேரம், நிபுணத்துவத்தை ஒதுக்குவதற்கு முன்வந்தார்.

முக்கிய சந்திப்புகள் நிகழ்வுகளில் எனக்கு அவரது ஆதரவு பெரும் உதவியாக அமைந்தது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

இந்தவிடயத்தில் இலங்கை அரசாங்கமோ வெளிவிவகார அமைச்சோ ஒரு சதம் கூட செலவிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (05)





# ரயில் நிலையக் கூரை விழுந்து நொறுங்கியது

## பம்பலபிட்டியில் சம்பவம்

கொழும்பு பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தின் கூரை மழை மற்றும் காற்றால் இடிந்து வீழ்ந்துள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை மணியளவில் பெய்த கடும் மழை மற்றும் காற்று காரணமாக பம்பலப்பிட்டி ரயில் நிலையத்தின் கூரை இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 2 பேர் சிறு காயம் அடைந்தனர். (05)

# மின்சார மீற்றரில் மோசடி: மட்டக்களப்பில் இருவர் கைது

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையக பிரிவிலுள்ள இருதயபுரம் பகுதியில் மின்சார அளவீடான மீற்றரில் மோசடி செய்த வீட்டு உரிமையாளர்கள் இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் இரு வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த மின்சார மீற்றரில் சட்டவிரோதமாக மோசடி செய்து மின்சாரத்தை பெற்றுவந்துள்ளமை மின்சார சபையினரால் கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து, கொழும்பில் இருந்து வருகை தந்த உத்தியோகத்தர்கள் பொலிஸாருடன் குறித்த இரு வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது, மின்சார மீற்றரை சோதனையிட்டபோது அதில் இருந்து திருட்டுத்தனமாக மின்சாரத்தை பெற்றுள்ளதை கண்டுபிடித்ததையடுத்து, அந்த இரு வீட்டின் உரிமையாளர்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# வட்டக்கொடை ஆலயத்தில் திருட்டு

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வட்டக்கொடை ஒக்ஸ்போட் தோட்ட முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருட்டு சம்பவம் ஒன்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட திருடர்கள் ஆலயத்தின் கதவை உடைத்து அங்கு அம்மனுக்கு அணிவித்திருந்த தங்க தாளி மற்றும் ஐயப்பன் சுவாமிக்கு அணிவித்திருந்த தங்க சங்கிலி, ஆலயத்தின் உண்டியல் எனத் திருடிச் சென்றுள்ளனர். ஒக்ஸ்போட் தோட்டத்தில்வெள்ளிக்கிழமைமாலைமுதல்சனிக்கிழமை காலை வரை மின் தடை ஏற்பட்டிருந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறித்த திருட்டு சம்பவம் நிகழ்ந்திருப்பதாக சந்தேகிப்பதாகத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தனர். அத்துடன் இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்து விசாரணைகளில் அதிரடிபடையினரும் ஈடுபட்டுள்ளனர். மேலும், இந்த ஆலயத்தில் கும்பாபிகே பெருவிழா இடம்பெற்று இன்னும் ஒரு வருடம் கூட பூர்த்தியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.(05)

# 13 வயதுச் சிறுவன் ஆற்றில் மூழ்கி சாவு

மாத்தறை கம்புருப்பிட்டிய, சபுகொட பிரதேசத்தில் நில்வலா ஆற்றில் மூழ்கி 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் எட்டாம் தரத்தில் கல்வி கற்கும் கம்புருப்பிட்டிய உல்லல்ல பிரதேசத்தை சேர்ந்த தரூ தினுவர என்பவராவார்.

சிறுவன் தனது கல்லூரி அணியினருடன் ஹொக்கி பயிற்சியில் ஈடுபட்டிருந்துள்ளார். பின்னர் சக நண்பர்களுடன் ஆற்றில் குளிக்கச் சென்றுள்ளார்.

இந்நிலையில், சிறுவன் நீரில் மூழ்கி மூன்று மணித்தியாலங்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அகதிபோன்று தமிழகம் சென்ற மட்டக்களப்பு இளைஞர் கைது



இலங்கையில்இருந்துதனுஷ்கோடி கடல் பகுதிக்கு சட்டவிரோதமாக சென்ற இளைஞரை இந்திய கடலோர பொலிஸார் கைது செய்தனர்.

கடந்ததிங்கட்கிழமைதனுஷ்கோடி அருகேஉள்ளமணல்திட்டில்இலங்கை அகதி ஒருவர் வந்திறங்கி இருப்பதாக மீனவர்கள் மூலம் கடலோர பொலி-ஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதைத்தொடர்ந்து, கடலோர பொலிஸார் மீனவர்கள் உதவியுடன் மீன்பிடி படகு ஒன்றில் நடுக்கடல் மணல்திட்டில்தவித்துக்கொண்டிருந்த இலங்கை மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த கிரோகரன் என்ற கிரோர் (வயது - 31) என்பவரை மீட்டனர்.

தொடர்ந்து மண்டபம் மறுவாழ்வு முகாமில்வைத்துகிரோகரனிடம்பொலி-ஸார் விசாரணை நடத்தி வந்தனர்.

விசாரணையில் அவர் இலங்கையில் பண மோசடி வழக்கில் சம்பந்தப்பட்டுசிறைசென்றவர்என்றும் வழக்கு விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக தமிழகம் வந்துள்ளார் எனவும் மீண்டும் இலங்கை செல்ல முயற்சிகள் மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால், பாஸ்போர்ட் தடை சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை தனுஷ்கோடி பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். (05)

# காலங்கடந்த கனவா காலிஸ்தான் தனிநாடு ?




(4ஆம் பன்னத் தொடர்ச்சி...)

வகித்த இந்தியாவின் பஞ்சாப் மாகாணம் மொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என அகாலி தளம் கட்சி தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது. இந் திய அரசு முதலில் இதை நிராகரித்தாலும் பின்னர் நடந்த தொடர் கோரிக்கைகளாலும் வன்முறைச் சம்பவங்களாலும் இந்திய ஒன்றிய அரசு இதற்கு உடன்பட்டது.

தங்களுக்கு அதிக அதிகாரம் ஒன்றிய அரசால் தரப்படவில்லை என்ற காரணத்தால் காலிஸ்தான் தேசிய இயக்கம் தொடர்ந்து இயங்கி வந்தது. காலிஸ்தானுக்கு என அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளில் ஆதரவு திரட்ட முயற்சித்தது. 1980களில் காலிஸ்தான் அமைப்பால், காலிஸ்தான் தனி நாடு என அறிவிக்கப்பட்டு அதற்கெனத் தனி நாணயத்தையும் அஞ்சல் தலையையும் வெளியிட்டது.

### காலிஸ்தான் எழுச்சி

சீக்கியர்களுக்கென தனி தேசம் வேண்டுமென கூறிவந்த ஜர்னைல் சிங் பிந்த்ரன்வாலே, 1980ஆம் ஆண்டு இந்திய அரசால் கைது செய்யப்பட்டார். பின் 1984ஆம் ஆண்டு 'ப்ளூ ஸ்டார்' என்னும் இந்திய ராணுவத்தின் நடவடிக்கை மூலம் அவர் கொல்லப்பட்டார்.

குருநானக் தேவ் பல்கலைகழகத்தில் பேராசிரியராக இருக்கும் பர்மிந்தர் சிங் கூற்றுப்படி இப்போது சீக்கிய தனி தேசம் வேண்டுமென கூறுவோரின் எண்ணிக்கை மிகவும் சொற்ப அளவிலேயே இருக்கிறது என்கிறார் அவர். இந்நிலையில், காலிஸ்தான் தீவிரவாதம் மீண்டும் தலைதூக்கினால் பல பிரச்சினைகள் எழுந்து, பஞ்சாபிலும், அகில இந்திய அளவிலும் சட்டம் - ஒழுங்கு பிரச்னை கெட்டுவிடும் என இந்திய மத்திய அரசு ஊகிக்கின்றது.

### உலகளாவிய வாக்கெடுப்பு

இந்தியாவில் சீக்கிய மக்கள் தங்கள் தனிநாட்டு கோரிக்கையை வலுப்படுத்த உலகளாவிய ரீதியில் சுதந்திர காலிஸ்தானுக்கான வாக்கெடுப்புகளை நடாத்தி வருகின்றனர். 2021 ஒக்டோபர் 31 அன்று இங்கிலாந்தில் இருந்து தொடங்கிய வாக்கெடுப்பு சுவிட்சர்லாந்து மற்றும் இத்தாலி முழுவதும் பல நகரங்களில் நடைபெற்று, சுமார் 450,000 சீக்கியர்கள் வாக்களித்துள்ளனர்.

பஞ்சாப் வாக்கெடுப்பு ஆணையம் (PRC), வாக்கெடுப்புகள் மற்றும் நேரடி ஜனநாயகம் குறித்த அணிசேரா நிபுணர்களின் குழுவானது, வாக்களிக்கும் நடைமுறையை வெளிப்படைத்தன்மையையும், சர்வதேச அளவிலான நேர்மையான தேர்தல் என இணங்கி உறுதிப்படுத்துகிறது.

காலிஸ்தான் பொது வாக்கெடுப்பை அதிகாரபூர்வமாக எந்தவொரு மேற்கத்தய நாடுகளும் அங்கீகரிக்கவில்லை. ஆயினும் பலத்தசர்ச்சையைஉருவாக்கியுள்ள காலிஸ்தான் வாக்கெடுப்பு முடிந்து போன காலிஸ்தான் பிரச்சினையை மீண்டும் தூண்டிவிட்டு இந்தியாவில் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் செய்யப்படுவதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

தற்போது இந்தியாவில் சீக்கியர்கள் அனைவரும் அமைதியான முறையில், தேசிய ஒருமைப்பாட்டுடன் வாழ்ந்து வருகிறார்கள் என இந்திய அரசு கூறினாலும், புலம் பெயர் சீக்கிய மக்களால் காலிஸ்தான் தனிநாட்டு கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

அத்துடன் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் படுகொலையே கனடா-இந்தியா உறவில் உச்சக்கட்ட முறுகலை தோற்றுவித்துள்ளது

காலைக்கதிர் Kalaikkathir

**பயங்கரவாத.....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்திற்கு அமைவாகவே அச்சங்கம் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளது.

தனது தீர்மானம் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்ததாவது:

வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பன் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்டவாக்கத்தை அதிகளவில் பாதிப்பவையாக உள்ளன.

குறித்த சட்டமூலங்கள் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திடமே அல்லது துறை சார்ந்த எந்த தரப்பிடமோ கருத்துகளை கோராது தயாரிக்கப்பட்டுள்ளன. ஆகவே, சதாரணமக்கள்சமூகத்திற்குபாதிப்பை ஏற்படுத்தும் சட்டமூலங்களை அறிமுகம் செய்ய முன்னர், குறித்த தரப்பினருடன் கலந்துரையாடுவது மிகவும் முக்கியமான விடயமாகும்.

அவ்வாறான நிலையில் அரசு தன்னிச்சையாக கொண்டுவந்துள்ள வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பவற்றைஏற்றுக்கொள்ளமுடியாது என்று ஏகமனதான தீர்மானம் இலங்கைசட்டத்தரணிகள்சங்கத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆகவே, உடனடியாக எந்தவிதமான காரணங் களையும் வெளிப்படுத்தாது அரசாங்கம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பயங்க ரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் என்பனவற்றை மீளப் பெற்றுக்கொள்வது அவசியமாகும் - என்றுள்ளது.

முன்னதாக இலங்கை சட்டத்தரணிகள் கூட்ட மைப்பும் இந்தச் சட்டங்களை மீளப் பெறுமாறு வலியுறுத்தியிருந்தது.

**நிபா .....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் வைராலஜி தொடர்பான நிபுணர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

நிபா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் பதிவாகினால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்த அறிவிப்புக்கள் விரைவில் உள்நாட்டில் வெளியிடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளது - என்றார்.

# கனடா ஒன்ராரியோ மாகாணப் போக்குவரத்து இணை அமைச்சரானார் யாழ்ப்பாணத்தவர்



கனடாவின்- ஒன்ராரியோ மாகாண போக்குவரத்து துறை இணை அமைச்சராக ஈழத் தமிழரான விஜய் தணிகாசலம் என்பவர் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் வெள்ளிக்கிழமை பொறுப்பேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் இதற்குமுன் ஒன்ராரியோ மாகாண சட்டசபை உறுப்பினராக இருந்தவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் இவரது பெற்றோர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# தனது இளம் கணவரை கொடூரமாக அடித்துக் கொலை செய்த மனைவி

## நள்ளிரவில் நடந்த பயங்கரம்

நுவரெலியா, விஜிதபுர பிரதேசத்தில் பெண்ணொருவரின் தாக்குதலில் கணவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

சனிக்கிழமை இரவு இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக சந்தேகத்திற்கிடமானபெண்தனது கணவரை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

சனி இரவு பொலிஸ் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் விஜிதபுர பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடையவர்எனத்தெரியவந்துள்ளது.

வீட்டில்குடிபோதையில்இருந்த கணவர், மனைவி வேலையை முடித்துவிட்டு இரவுவீட்டுக்குவந்த பிறகு இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்த கணவர் தனது மனைவியைத் தாக்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் கணவனை மனைவி கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளார்.

32 வயதுடைய பெண் சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான போட்டியில் வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு பரிசில்






இலங்கை பொது நிதி கணக்குகள் சங்கத்தால் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைகள் கணக்குகள் மற்றும் செயலாற்றுகைதொடர்பானபோட்டியில் வடக்கு மாகாண சபைக்குட்பட்ட 29 பிரதேச சபைகளுக்குள் வவுனியா வடக்கு பிரதேச சபை மாகாணத்தில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டு தங்க விருதைப் பெற்றுள்ளது.

இவ் நிகழ்வு நேற்றையதினம் 22.09.2023 அன்று அனுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை பொது நிதி கணக்குகள் சங்கத்தின் தலைவர் செயலாளர் மற்றும் இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பிரதி செயலாளர்(நிதி), பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள்,

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு பிரதேசத்தில் அரச நிறுவனங்கள் இவ்வாறான செயற்பாடானது பாராட்டபட வேண்டிய ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(05)

# பண்ணையாளர்களின் போராட்டத்துக்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்குக



பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் தொடர்பில் ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனகிழக்கிலங்கைஇந்துக்குருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேசசெயலாளர்பிரிவுக்குட்பட்ட பெரியமாதவணை, மயிலத்தமடு பண்ணையாளர்கள் தங்களது மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத்தரக் கோரி பத்தாவது நாளாகவும் சுழற்சி முறையிலான கவனவீர்ப்புப் பேராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்தவிடயம் தொடர்பில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சித்தாண்டி பாடசாலைக்கு முன்பாக கடந்த 15 ஆம் திகதி முதல் போராட்டத்தில் பெரியமாதவணை, மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மகாவலி என்னும் போர்வையில் எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே, மேய்ச்சல்தரைப்பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறிய குடியிருப்புகளை உடனடியாக நிறுத்து, மாதவனையை மேய்ச்சல்தரை யாக பிரகடனப்படுத்து போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் பல்வேறு கோசங்களையும் எழுப்பியவாறு இன்றும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் எனத் செய்தியாளர் தெரிவித்தார்.

இன்றைய போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றிய உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(05)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# அடிப்படைவாத அமைப்புகளை அலட்சியப்படுத்தவே கூடாது

## சம்பிக்க ரணவக்க கருத்து



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு பின்னர் அடிப்படைவாத கொள்கையுடைய பல அமைப்புக்களை அரசு தடை செய்தது. ஆனால் அண்மையில் ஒரு சில அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. அடிப்படைவாத கொள்கையுடைய அமைப்புக்களை அலட்சியப்படுத்த கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்ப வம் தேசிய பாதுகாப்பு தொடர்பான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்னையும் படுகொலை செய்யும் நிலைப்பாட்டில் தான் பயங்கரவாதி சஹ்ரான் இருந்தான்.

பயங்கரவாதி சஹ்ரான் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு சாட்சியமளிக்கையில் பல விடயங்களை நான் குறிப்பிட்டேன். ஆனால் ஆணைக்குழுவின் அறிக்கையில் நான் வழங்கிய சாட்சியங்கள் உள்ளடக்கப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அன்ஷிப் அசாத் மௌலானா என்பவர் சனல் 4 தொலைக்காட்சிக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு சாட்சியம் வழங்கியுள்ள பின்னணியில் தான் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதி சஹ்ரான் தவறான மத மார்க்கத்தால் ஈர்க்கப்பட்டு மத வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டார். இதனை பாதுகாப்பு தரப்பினர் பொருட்படுத்தவில்லை.

இதன் விளையே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்.

சஹ்ரானுக்கும், புலனாய்வு பிரிவு மற்றும் பாதுகாப்பு தரப்புக்கு இடையில் தொடர்பிருந்தது என்பதை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட பாதுகாப்பு தரப்பினர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதை மறுக்க முடியாது.

பயங்கரவாதி சஹ்ரானுடன் தொடர்புடைய தரப்பினர் தென்னிந்தியாவில் உள்ளார்கள். கடந்த ஆண்டு தென்னிந்தியாவில் கோயம்புத்தூர் பகுதியில் சஹ்ரான் தரப்புடன் தொடர்புடையவர்கள் குண்டுத்தாக்குதலை மேற்கொண்டார்கள். ஆகவே பிரச்சினை இன்றும் முடிவடையவில்லை - என்றார்.

# ஆற்றில் மூழ்கி சிறுமி இறப்பு

கம்புருபிட்டிய, கிராம்ப ஆரா ஓயாவில் நேற்று 13 வயது சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கிராம்ப ஆரா ஓயா சபுகொட பிரதேசத்தில் குழுவொன்று குளித்துக் கொண்டிருந்த போது, குறித்த சிறுமி நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாடசாலையில் ஹொக்கி பயிற்சிகளை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் போது குறித்த சிறுமி மேலும் ஒன்பது நண்பர்களுடன் நீராடச் சென்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவி கம்புருபிட்டிய, உல்வல பிரதேசத்தைச் சேர்ந்தவர்.

உடற்கூறாய்வின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# புங்குடுதீவிலும் திலீபனுக்கு அஞ்சலி

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தல் நிகழ்வை முன்னிட்டு தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய வாகன ஊர்த்தி பவனி புங் குடுதீவில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

புங்குடுதீவு குறிகட்டுவான் பகுதியில் ஆரம்பித்த மேற்படி நினைவேந்தல் ஊர்த்தியானது புங்குடுதீவில் பல பகுதிகளிற்கும் பவனியாகச் சென்றது.

இதன் போது மக்கள் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

# 12 வயது மாணவி துஷ்பிரயோகம் 14 வயது மாணவன் கைதானார்



12 வயதுடைய பாடசாலை மாணவியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய 14 வயதுடைய மாணவனை சந்தேகத்தின் பேரில் குருந்துவத்தை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இருவரும் குருந்துவத்தை கரகல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்ட மாணவி ஏற்கனவே அவரது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளார் எனவும் அந்த சம்பவம் தொடர்பில் மாணவியின் தந்தை கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையிலேயே அந்த மாணவி மீண்டும் 14 வயது மாணவனால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

# இலங்கைப் பிரஜை செலுத்தவேண்டிய கடன் 11 லட்சத்து 81 ஆயிரம் ரூபாய்

## பேராதனைப் பல்கலை ஆய்வில் தகவல்

நாடு பெற்ற கடனை மக்கள் செலுத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், ஒவ்வொரு பிரஜையும் கடனாளி யாகியுள்ளதாகவும் எவ்வளவு ரூபாவுக்கு கடனாளி களாக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் ஆய்வொன்றின் மூலம் தெரிய-வந்துள்ளது.

இது தொடர்பான ஆய்வை பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார விஞ்ஞானம் மற்றும் புள்ளிவிவர கற்கைப் பிரிவின் பேராசிரியர்களான வசந்த அத்துக்கோரள மற்றும் தயாரத்ன பண்டா ஆகியோர் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

அந்த ஆய்வின்படி, கடந்த ஏப்ரல் வரையான காலப்பகுதி வரை நாடு பெற்ற கடனில் தனி நபர் ஒருவர் 11 லட்சத்து 81 ஆயிரம் ரூபாவை செலுத்தவேண்டிய கடனாளியாக மாறியுள்ளார்.

இதேவேளை, நான்கு பேர் கொண்ட குடும்பமொன்று 47 லட்சத்து 24 ஆயிரம் ரூபாவை கடனாகசெலுத்தவேண்டியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 2020 ஆம் ஆண்டில் 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவாக காணப்பட்ட தனிநபர் கடன் தொகை இவ்வாண்டு ஏப்ரல் மாதமாகும்போது 4 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து 11 லட்சத்து 81 ஆயிரம் ரூபாவாகக் காணப்படுகிறது. (05)

# சட்டவிரோத மண், கல் விற்பனை நிலையம் பருத்தித்துறைப் பொலிஸாரினால் முற்றுகை

தும்புத் தொழிற்சாலை எனும் பெயரில் இயங்கிவந்த சட்டவிரோத மணல் விற்பனை, கல்லரிவு உற்பத்தி விற்பனை நிலையம் யாழ். பருத்தித்துறை பொலி-ஸாரால் வெள்ளிக்கிழமை முற்றுகையிடப்பட்டுள்ளது.

தென்னந் தும்பு உற்பத்தி தொழிற்சாலை என்ற பெயரில் அனுமதி பெறப்பட்டு அங்கு பாரியளவில் மணல் அகழப்பட்டு அவை விற்பனை செய்யப்பட்டு வந்ததுடன் மண் கல் அரிவு செய்யப்பட்டு அதுவும் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் அடிப்படையில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 7:30 மணியளவில் பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க தலைமையிலான 15 இற்கும் மேற்பட்ட பொலிஸார் குறித்த நிலையத்தை சுற்றிவளைத்து நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நான்கு மோட்டார் சைக்கிள்கள், ஒரு ஜேசீபி என்பனவும் கைப் பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபரும், நான்கு மோட்டார் சைக்கிள்களும், ஜேசீபி வாகனமும் பருத்தித் துறை நீதிமன்றில் சனிக்கிழமை சட்ட நடவடிக்கைக்காக முன் வைக்கப்பட்டன.

குறித்த தொழிற்சாலை யில் இரு நூறு மீற்றருக்கு அதிக நீளமாகவும் சுமார் 15 அடி ஆழமும் 20 அடிக்கு மேல் அகலமும் கொண்ட பாரிய குழி ஜேசிபி இயந்திரத்தால் தோண்டப்பட்டே சட்டவிரோத மணல் விநியோகம், மண் கல்லரிவு என்பன இடம் பெற்று வந்துள்ளமை தெரியவந்துள்ளது. (05)

# சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்த பொருள்களை ஏலத்தில்விட தீர்மானம்

## ரஞ்சித் சியாம்பல பிட்டிய தகவல்



இலங்கை சுங்க திணைக் களத்தினரால் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களை இணையத்தில் ஏலம் விடுவதற்கு விசேட ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன எனப் பதில் நிதி யமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருகொடவத்த பகுதியில் உள்ள சுங்க முனையத்துக்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய கண் காணிப்பு விஜயமொன்றை மே ற்கொண்டிருந்தார்.

இதன்போதே அவர் குறித்த விடயத்தை கூறியுள்ளார்.

இதுவரையில் 18 ஆயிரத்து 765 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குகொண்டு வரப்பட்டு சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# தொழு நோயை கண்டறிவதற்கான விசேட பயிற்சிகளும் கருத்தரங்கும்







கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சனிக்கிழமை தொழுநோய் தொடர்பான விசேட பயிற்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழுநோய் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகளில் ஒன்றாகக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய முன் னெடுக்கப்பட்ட இந்த விசேட பயிற்சி நெறி கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பியலாளர் டாக்டர் எம்.ஏ.சி.எம் பஸாலால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்தியத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், மேற்பார்வை பொது சுகாதார மாதுக்கள் மற்றும் பொது சுகாதார மாதுக்கள் என கள உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் தொழு நோயைக் கண்டறிவதற்கான வழிமுறைகள், அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் முறைமை, தொழுநோயை கட்டுப்படுத்து-வதற்காக சமூக நிறுவனங்களின் பங்களிப்பை பெறுவதற்கான வழிமுறைகள் என பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. (05)

# தேசிய அணியில் திறமையான கிழக்கு வீரர்கள் விளையாட வாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும்

## கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம்.சபீஸ் கோரிக்கை







விளையாட்டு உலகம் எங்கேயோ போய்க்கொண்டிருக்கின்றது. இன்று இந்தியன் பிரீமியர் லீக் என்றும் ஸ்ரீலங்கா பிரீமியர் லீக் என்றும் நடத்தப்பட்டு திறமைகள் அடையாளம் காணப்பட்டு அதிகளவான வீரர்கள் தேசிய அணிக்குள் உள்வாங்கப்படுகின்றபோது கிழக்கில் இன்னமும் மென்பந்தில் விளையாடிக் கொண்டிருக்கிறோம். இன்னும் எத்தனை நாள்களுக்கு நாம் மென்பந்தில் கிரிக்கட் விளையாடுவது, இது ஒருவேதனையான விடயமாகும். இன்னும் 10 வருடத்திலாவது எமது பிள்ளைகள் மென்பந்தில் உள்ள தேர்ச்சி இருக்கத்தக்கதாக கடினபந்திலும் அதியுச்ச தேர்ச்சி பெற்று தேசிய அணியில் விளையாடுவதற்கான ஆரம்ப ஏற்பாடுகளை செய்து கொண்டு வருகின்றோம். இன்னும் குறிப்பிட்ட நாள்களுக்குள் கடின பந்துக்கான பயிற்சிக் கூடாரத்தை விளையாட்டு வீரர்களுக்கு கையளிக்கவுள்ளோம் என அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் பிரதானியுமான எஸ்.எம். சபீஸ் தெரிவித்தார்.

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரப்பின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு பாலமுனை மெரூன் விளையாட்டு கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இரவுநேர மென்பந்து சுற்றுப்போட்டிகளின் இறுதி நாள் போட்டிகளுக்கு கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டபோதே அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், முன்னாள் அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ரவூப் ஹக்கீம், எஸ்.எம். சபீஸ் முன்வைத்த விடயம் ஒரு முக்கியமான விடயமாகும். அம்பாறை மாவட்டத்தில் 150 கழகங்கள் அரச திணைக்களங்களில் பதியப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன எனக் கூறுகின்றனர், ஆனால் யாருக்கு வழங்கினார்களோ தெரியாது. நிறைய திறமையான வீரர்களை இங்கு நான் காண்கிறேன். எமது வீரர்கள் தேசிய அணியில் இணைத்துக்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை நாம் செய்ய வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பில் நான் நாடாளுமன்றத்திலும் எதிர்காலத்தில் பேச உள்ளேன். மேலும் இலங்கை கிரிக்கட் சங்க தலைவரை அண்மையில் சந்தித்திருந்தேன். தங்களுக்கு உதவி தேவையென்றால் கேளுங்கள் என்று சொன்னார். சகோதரர் சபீஸ் கூறியது போன்று ஆரம்ப கட்ட விளையாட்டு உபகரணங்களை பெற்றுத்தர ஏற்பாடுகள் செய்து தருகிறேன். - என்றார். (05)


# ஊடகவியலாளர் ஒன்றிய வருடாந்த ஒன்றுகூடல்

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) 19 ஆவது ஆண்டு நிறைவும், வருடாந்த ஒன்றுகூடலுடன் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 2023.09.30 ஆம் திகதி பொத்துவில் தனியார் விடுதியில் இடம்பெறவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தெரிவித்தார்.

ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஒன்றுகூடல் நிகழ்வுக்கு பொத்துவில் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக்குழுத் தலைவருமான எஸ்.எம்.எம்.முஷாரப் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்த ஒன்றுகூடலின்போது கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பலவிடயங்கள் பற்றியும், ஒன்றியத்தின் எதிர்காலத்திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றி கலந்துரையாடப்பட்டதன் பின்னர் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளதாக ஒன்றியத்தின் தலைவர் தெரிவித்தார்.

ஒன்றியத்தின் அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அன்றையதினம் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளதாகவும், ஒன்றியத்தின் ஊடகவியலாளர்கள் இந்தவருட இறுதியில் கௌரவிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)


Tourism Bureau
Northern Province
proudly presents
WORLD TOURISM DAY - 2023
Northern Feast
OUTDOOR FESTIVAL
WORLD TOURISM DAY 2023
TOURISM & GREEN INVESTMENTS
Sept -29
09.00am - 09.00pm
VENUE:JAFFNA CULTURAL CENTER
ஊடக அனுசரணை :
காலைக்கதிர்
Kalaikkathir

காலைக்கதிர்
Kalaikkathir

# முரணான தகவல்களால் ஈஸ்டர் தாக்குதலில் சந்தேகம் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றார் ரிஷாத்

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பாக வெளியிடப்படும் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாகவும், விந்தையாகவும் இருப்பதால்தான் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் இது பற்றித் தெரிவித்ததாவது –

'ஆட்சியதிகாரத்தைப் பிடிப்பதற்காக நடத்தப்பட்ட கொலைவெறிதான் ஈஸ்டர் தாக்குதல். இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதிலிருந்து வெளியாகி வரும் முன்னுக்குப் பின் முரணான தகவல்களிலிருந்து இதைப் புரிந்துகொள்ள முடிகிறது. சனல் 04 அறிக்கையைப் பாதுகாப்பு அமைச்சு உடன் நிராகரித்தமை இந்தச் சந்தேகத்தை வலுவூட்டுகிறது.

எனவே, தாக்குதலில் பலியானவர்களின் உறவினர்களுக்காகவும் சிறையில் அடைக்கப்பட்டு பழிவாங்கப்பட்ட என் போன்ற நிரபராதிகளுக்காகவும் இந்த ஈஸ்டர் தாக்குதலை சர்வதேச விசாரணைக்குட்படுத்தி உண்மைகளைக் கண்டறிய வேண்டும்.

அரசாங்கத்திலிருப்பவர்கள் விசாரணை நடத்தி இந்த உண்மைகளைக் கண்டறிய முடியாது. இந்த அரசாங்கத்தைக் கொண்டுவருவதற்காகவே ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டது. கோட்டாபய ராஜபக்ஷ 2014 இல் பொதுபல சேனாவின் அலுவலகத்தை காலியில் திறந்து வைத்ததிலிருந்து இதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

பென்பக்கை எரித்தமை, மாவனல்லை சிலை உடைப்பு உள்ளிட்ட முஸ்லிம் விரோதப் போக்குகள் இதற்காகவே கட்டவிழ்க்கப்பட்டன. முஸ்லிம் இளைஞர்களைத் தவறாக வழிநடத்த எடுக்கப்பட்ட தீர்மானங்கள்தான் இவை. இந்த வரலாற்றுச்சான்றுகளைமறைப்பதற்காக இவர்கள் எடுக்கும் பிரயத்தனம் முன்னுக்குப் பின் முரணான தகவல்களை வெளியிட வைக்கிறது. இதனால்தான், எங்களது சந்தேகங்களும் வலுக்கிறது.

சாய்ந்தமருதில் தற்கொலை செய்து பலியானோர் 16 பேர் என அறிவித்தனர். 2020, 2021, 2022 களில் வெளியான டீ.என்.ஏயில் சாரா கொல்லப்படவில்லைஎன்றனர். 2023 டி.என்.ஏ. சாய்ந்தமருதில்தான் சாராவும் கொல்லப்பட்டார் எனக் கூறுகிறது. அங்கே 17 சடலங்கள் மீட்கப்பட்டனவா? இல்லையே!

குண்டு வெடித்த பின்னர் காலில் படுகாயங்களுடன், பெண்டேச் கட்டியவாறு தன்னுடன் வீடியோ தொலைபேசியில் சாரா பேசியதாக அவரது தயார் கூறியுள்ளார். சஹ்ரானின் மனைவியும் இந்தத் தாக்குதலிலிருந்து சாரா தப்பியதாக ஜனாதிபதி ஆணைக் குழுவில் வாக்குமூலம் வழங்கியிருக்கிறார்.

ஈஸ்டர் குண்டு வெடிக்கும் வரைக்கும் சஹ்ரானைத் தெரியாது என்கின்றனர் புலனாய்வுத் துறையினர். ஆனால், 2012 இலிருந்து சஹ்ரானுக்கு பாதுகாப்பு அமைச்சால் சம்பளம் வழங்கப்பட்டதாக பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார்.

அபுஹின்த் என்பவருடன் அடிக்கடி சஹ்ரான் பேசினார் என வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலைஅவசரமாகநடத்த வேண்டியதன் அவசியத்தை அவர் துரிதப்படுத்தினார் எனவும் அந்த வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யார் இந்த அபுஹின்த்? இவர் இதுவரை கைது செய்யப்படவில்லை ஏன்?

விசாரணைகளில் அக்கறை செலுத்திய அதிகாரிகள் இடமாற்றம் அல்லது பதவியிறக்கத்துக்கு ஆளாகியுள்ளனர். சொனிக் என்பவர் பற்றி விசாரணை நடத்துவதிலிருந்து ஐ.பி.பண்டார தடுக்கப்பட்டுள்ளார். ஐ.பி. ஜெயசிங்கவுக்கு கொரோனா எனக்கூறிஉயிருடனேகொளுத்தியுள்ளனர். இவ்வாறான சம்பவங்கள்தான் எங்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

தாக்குதலுக்குப் பின்னர், கம்பளையில் சாதிக் ஹக் என்பவரைக் கைது செய்து கொழும்புக்கு அழைத்து வருகையில், தங்களிடம் ஒப்படைக்குமாறு சி.ஐ.டியினர் கூறியுள்ளமையும் தெரியவந்துள்ளது. மாத்தளை சின்ன சஹ்ரான் என்பவரிடம், இந்தத் தாக்குதலை ஐ.எஸ்.ஐ.எஸ். நடத்தியதாகக் கூறும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐம்பது வீத வெற்றியீட்டியவர்களுக்கு தாக்குதல் ஏன் அவசியம் எனக் கேட்கின்றனர். இந்தத் தேர்தலில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஐம்பது வீதத்தையும் பெறவில்லை எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவைகள்எல்லாம் செய்தவர்களைத் தப்பிக்கச் செய்வதற்கான, திசை திருப்பும் முயற்சிகள் இவை. இவ்வாறு கொலைவெறியில்



அடித்தள மிட்டு ஆட்சிக்கு வந்த கோட்டாபயவை இரண்டு வருடங்களிலே மக்கள் துரத்திவிட்டனர். இருந்தாலும் இவர்களின் செல்வாக்கு இன்னும் இந்த அரசாங்கத்தில் உள்ளது. எனவே, சர்வதேச விசாரணை நடத்தினாலே குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம், தண்டிக்கலாம்.

சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதியை எனது அமைச்சு வழங்கியதாக இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் தெரிவித்தார். இதுவரை காலமும் என்வசம் இருந்த எந்த அமைச்சுக்கும் இவ்வாறான அதிகாரம் வழங்கப்பட்டதில்லை. இஸ்லாத்தை நிந்திக்கும்கருத்துக்கள், ஜம்இய்யதுல் உலமா குறித்த விமர்சனங்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேசம் பற்றிய அவதூறுகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

சாய்ந்தமருதில் மறைந்திருந்த சஹ்ரானின் சகாக்களை புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடிக்கவில்லை. சாய்ந்தமருது மக்களே படையினருக்கு தெரியப்படுத்தினர். – என்றும் அவர் தெரிவித்தார். (05)

# சர்வதேச விசாரணைப் பொறியே உண்மையை கண்டறிய ஒரேவழி

## திட்டவட்டமாக சம்பந்தன் அறிவிப்பு

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் சம்பந்தமாக உண்மைகளைக் கண்டறியப்பட வேண்டுமாயின் ஐக்கிய நாடுகளின் பிரசன்னத்துடனான சர்வதேச விசாரணையொன்றே அவசியம் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

உள்நாட்டுபோர்நடைபெற்ற காலத்திலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களிலும் கொல்லப்பட்டவர்கள்இந்தநாட்டின்பிரஜைகள் என்பதை அரசாங்கம் புறந்தள்ளிவிட்டு தொடர்ந்தும் பொறுப்பின்றிச் செயற்பட முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரில் வெளியிடப்பட்டுள்ள இலங்கையில் மீளிணக்கம், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றம் சம்பந்தமான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க்கின் எழுத்துமூலமான அறிக்கை மற்றும், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சர்தேச விசாரணையொன்று கோரப்படுகின்றமை ஆகிய விடயங்கள் சம்பந்தமாகக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் மீறப்பட்ட மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் சம்பந்தமாக அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படுவதற்கு இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சர்வதேச தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், இலங்கை அரசாங்கம் உள்நாட்டில் எவ்விதமான முன்னேற்றகரமான செயற்பாடுகளையும் தொடராதிருப்பதோடு, ஒருசில விடயங்களை ஆரம்பித்திருப்பது போன்று வெளிப்படுத்தினாலும் அவற்றிலும் காலதாமதத்தைச் செய்து வருகின்றது.

மேலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம், அவதானிப்பு அறிக்கை உள்ளிட்டவற்றையும் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் நிராகரித்து வருகின்றது.

இலங்கை அரசாங்கம் ஒருவிடயத்தைப்புரிந்துகொள்ள வேண்டும். உள்நாட்டுப் போரின்போது, இளைஞர்களும், யுவதிகளும் பாதுகாப்பைத் தேடி படையினரிடத்தில் சரணடைந்தார்கள். அதன் பின்னர் அவர்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்களுக்கான பாதுகாப்பை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஆனால் அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் விலகியுள்ளது.

இந்நிலையில், சரணடைந்தவர்கள், கொலைசெய்யப்பட்டவர்கள், காணாமலாக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். அதற்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது என்று அரசாங்கம் தொடர்ச்சியாகப் புறந்தள்ளிச் செயற்பட முடியாது. அதுமட்டுமன்றி உள்ளக ரீதியில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று காரணம் கூறிக் காலங்கடத்தவும் முடியாது.

உள்ளக ரீதியில் எவ்விதமான முன்னேற்றகரமான விசாரணைகளும் இடம்பெறவில்லை என்பது கடந்த காலங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, உண்மைகளைக் கண்டறிவதற்காக ஐ.நாவின் பங்கேற்புடன் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டு நான்கு வருடங்களாகின்றன. இதுவரையில் அதனுடன் தொடர்புடையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

இந்நிலையில் தற்போது அந்தத் தாக்குதல் தொடர்பில் சனல்4 ஊடகம் காணொளியொன்றை வெளிப்படுத்தியுள்ளது. அதில் கூறப்படுகின்ற விடயங்களுக்கு அமைவாக விசாரணைகளை முன்னெடுக்குமாறு பேராயர் உள்ளிட்ட பல தரப்பினரும் கோருகின்றார்கள்.

அத்துடன், உள்ளகப் பொறிமுறைகள் ஊடான விசாரணைகள் மீது நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளதால் சர்வதேச விசாரணையொன்றை தென்னிலங்கையின் பல தலைவர்களும் கோருகின்றார்கள். அவ்வாறான மாற்றம் வரவேற்கத்தக்கது.

ஆகவே, அரசாங்கம், இந்த மிலேச்சத்தனமானதாக்குதலில் உயிரிழந்த உறவினர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டுமாயின் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுத்து உரியவர்களை வெளிப்படுத்த வேண்டும். அதில் தொடர்ந்தும் தாமதங்களை அரசாங்கம் செய்கின்றபோது சர்வதேசம் தலையீடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகின்றேன். – என்றார். (05)

# 14 வயதுப் பெண் பிள்ளை சிறுவர் இல்லத்தில் மாயம்

## குருநாகல் பொலிஸில் முறையீடு

குருநாகல்பகுதியிலுள்ளசிறுவர்இல்லமொன்றில் பராமரிக்கப்பட்டு வந்த பிள்ளையொன்று காணாமல் போயுள்ளதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிள்ளை மாதம்பே பகுதியைச் சேர்ந்த 14 வயதுடையது என பொலிஸார் தெரிவித்தனர்.

பிள்ளை காணாமல் போனமை குறித்து சிறுவர் இல்லத்தின் பாதுகாவலர்கள் பொலிஸில் முறைப்பாடளித்துள்ளனர்.

காணாமல் போன பிள்ளையை கண்டுபிடிக்க குருநாகல் தலைமையக பொலிஸ் பிரிவின் சிறுவர் மற்றும்மகளிர்பணியகம்மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (05)

# 'செயல்' குறுந்திரைப்படம்!

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக கலை மற்றும் கலாசார பீட மாணவ பேரவையின் ஏற்பாட்டில் பீட மாணவர்களின் புது முயற்சியால் உருவாகி திரையிடப்பட்ட செயல் எனும் குறுந்திரைப்படத்தின்அறிமுகவிழாகலை மற்றும் கலாசாரபீட மாணவ பேரவையின் தலைவர் ஸையித் உர்பி தலைமையில் கலை கலாசாரபீட கலையரங்கில் நடைபெற்றது.

இந்தக் குறுந்திரைப்பட அறிமுக நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்துகொண்டதுடன் மேலும், கலை மற்றும் கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர், பல்கலைக்கழக மாணவநலசேவைகள் மைய பணிப்பாளர் கலாநிதி எம். றிஸ்வான், பல்கலைக்கழக பேராசிரியர்கள், துறை தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக பொறியியலாளர் எம்.ஐ. பஸீல், கலை கலாசார பீடத்தினுடைய சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.அஸ்ஹர் மற்றும் நிர்வாக கல்வி சார் கல்வி சாரா உத்தியோகத்தர்கள், இஸ்லாமியக் கற்கை மற்றும் அரபு மொழி பீட மாணவத் தலைவர் மற்றும் மாணவ மாணவிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

கலை கலாசார பீட மாணவ பேரவை சார்பாக பல்கலைக்கழக அழகையும், பல்கலைக்கழக வாழ்வையும், நாட்டின் பொருளாதார நெருக்கடியில் பெற்றோர்கள் சந்திக்கும் பொருளாதார சிக்கல்களையும் பற்றி கருவாகக் கொண்டு வெளிவந்துள்ள இந்த குறுந்திரைப்படம் தொடர்பான விமர்சனத்தை சமூகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.எம். அய்யூப் வழங்கினார். நிகழ்வில் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், கலை மற் றும் கலாசார பீட பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில்ஆகியோர்வாழ்த்துரை நிகழ்த்தினர். (05)

# பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் குறித்து விசேட வேலைத்திட்டம்



பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளின் விதிமுறைகளை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் பயன்படுத்தக் கூடிய உணவு வகைகளின் தரங்கள் குறித்துக் கடுமையான ஆய்வு நடத்தப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# பாடசாலை சீருடைகளுக்கான நிதி வழங்க சீனா இணக்கம்!

நாட்டின் பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்துக்குத் தேவையான சீருடைக்குச் செலவாகும் முழுத் தொகையையும் வழங்க சீனா இணங்கியுள்ளது.

கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியில் கலந்துகொண்டு கருத்துரைத்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

இந்த வருடம் 70 வீதமான பாடசாலை சீருடைகளைசீனஅரசாங்கம்வழங்கியிருந்ததாகவும் அடுத்த வருடத்துக்குத் தேவையான பாடசாலை சீருடைகளையும்வழங்கசீனா இணங்கியுள்ளதாகக் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (05)


தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
உலக சுற்றுலா தினம்
2023
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர்:-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.09.2023இல் வெளியிடப்பெற்றது.